**செய்தி வெளியீடு எண்: 617** **நாள்: 15.10.2012**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள், சட்டமன்ற பேரவையில் தமிழகத்திலுள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக ரூ. 100 கோடி ஒதுக்கப்படும் என அறிவித்தார்கள். அதனடிப்படையில் அத்தொகையை பயன்படுத்துவதற்கான ஆய்வுக் கூட்டம் இன்று 15.10.2012 காலை 11.00 மணி அளவில் தலைமைச்செயலகத்தில் நாமக்கல் கவிஞர் மாளிகையில் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.பி.பழனியப்பன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் உயர்கல்வித்துறையின் அரசு சிறப்பு செயலாளர் திரு. P.W.C டேவிதார், இ.ஆ.ப., கல்லூரிக்கல்வி அனைத்து மண்டல இணை இயக்குநர்கள் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**